சிவமயம்

News paper in Ceylon
P. M. G. NO. H. A 89/300 of 1939.

# இந்துசாதனம்

விரோதி வருஷம் (1889) ஆவணிமாதம் 28-ந்உ ஆரம்பமானது

செவ்வாய் வெள்ளிதோறும் வெளிவருவது

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிளவேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

புத். ருகூ] யாழ்ப்பாணம் — சர்வசித்து ஹு புரட்டாதி மீ எ உ (1947 செப்டம்பர் 23 செவ்வாய்க்கிழமை) [இல சஎ

## பிரார்த்தனை

இல்லையென்று சொல்வதற்கும் இருக்கின்ற ஒருபொருளாய்
இருப்பதென்பார் ருசுப்படுத்த இல்லாததும் அதுவாய்
அல்லவென்று மறுப்பதிலும் அங்கிருந்து பேசுவதாய்
ஆம்என்ற மாத்திரத்தில் அறிந்துவிட முடியாதாய்
வல்லமென்றே அகங்கரித்தால் பலங்குறைக்கும் வல்லமையாய்
வணங்கிஅதைத் தொழுவார்க்கு வலுவில்வரும் பெருந்துணையாய்
சொல்லையொத்துக் செயல்மனமும் தூயவர்க்கே தோற்றுவதாய்ச்
சொல்வதற்கு முடியாத சுர்தசத்தைத் தொழுதிடுவோம்,

— நாமக்கல் கவிஞர்

# ஐயனார் மகத்துவம்

## ஐயனார் இந்திராணிக்கு அருள்செய்தமை

(முற்றொடர்)

சூரபன்மனுடைய கட்டளைப்படி அவனது மூத்தமகனாகிய பானுகோபன் விண்ணுலகத்திற்குப் படையெடுத்துச் செல்ல, தேவர்கட்கரசனாகிய இந்திரன் அப்பானுகோபனுக்குப் பயந்து தன் தேவியுடன் விண்ணுலகத்தைவிட்டகன்று மண்ணுலகிலுள்ளதாகிய சீகாழிப்பதியில் மறைந்திருந்து, சூரபன்மன் முதலாம் அசுரர்கள்மாளவும் தன்னுடைய பழைய நிலைமையும் அரசும் மீளவும் வேண்டுமென்று பரமசிவனை நோக்கித் தவஞ் செய்தான்; இந்திரனுடைய மகனாகிய சயந்தனும் பல தேவர்களும் தேவமாதரும் சூரபன்மனால் அவனுடைய இராசதானியாகிய மகேந்திராபுரியிலே சிறையிடப்பட்டனர்; அகப்படாது தப்பிய சில தேவர்கள் பூவுலகத்திற்கு வந்து சீகாழியிற் கரந்திருந்து தவப்புரியும் இந்திரனைக்கண்டு, அசுரரால் தங்களுக்கு நேர்ந்த துன்பங்களை யெல்லாம் முறையிட்டுப் புலம்பினார்கள்; மீளவும் அத்தேவர்கள் தங்கள் அரசனைப் பணிந்து, "மகாராசாவே, அந்தச் சூரன் முதலாகச் சொல்லப்பட்ட அசுரர் மாண்டொழியவும் நாங்கள் பழையபடி எங்கள் பதவியையடைந்து வாழவும், எங்கள் தலைவராகிய நீரே உபாயஞ்சூழ வேண்டும்' என்று இரந்தார்கள்; அதனைக்கேட்ட தேவர்கோன் சிறிதுநேரஞ் சிந்தித்து, அப்படி உபாயஞ்செய்வதாகச்சொல்லி அத்தேவர்களைத் தேற்றி அங்கிருக்க விடுத்துத் தன்தேவி தனியே இருக்குமிடத்தை யடைந்தான்.

தன்னுபகன் வரவைக்கண்ட அயிராணி சமேரலென எழுந்து முற்பட்டுச் சென்று அவன் பாதங்களிற பஞ்சாங்கமாக வீழ்ந்து வணங்கியெழுந்து அவனை இருக்கச்செய்து அயல்ல விநயமாக நின்றாள் நின்றவள் தன்னுபகன் முகவாட்டமுற்றிருப்பத அவதானித்து "என் பிராணநாதரே, எக்காலத்து மில்லாத சஞ்சலத்தோடு தேவரீர் இப்பொழுது இங்கே வந்தருளியதென்னையோ" என்று உளளப்பதைப்புடன் வினவினாள்; விண்ணவர்க்கரசன் தன் தேவியைப் பரிவுடன் பார்த்து "வாராய்சகியே, எனறைக்குச் சூரபன்மன் அருந்தவஞ் செய்து பரமசிவனிடத்திற் பல வரங்களையுய பராகிரமத்தையும் பெற்றானோ, அன்றைக்கே தேவர்களாகிய எங்களைத் தீராச் சஞ்சலம் பிடித்தது; சூரபன்மன் செய்யுங் கொடுமைக்கு ஆற்றாது சில தேவர்கள் தப்பியோடி வந்து தங்கள் குறையை எனக்கு முறையிட்டுப் புலம்புகிறார்கள் எனை அரசனென்று நம்பியிருந்ததேவர்களுக்கு நேர்ந்தகுறையைப்போக்காமலும் எங்கள்ஏகபுத்திரனாகிய சயந்தனும் பல தேவர்களும தேவமகளிர்களும் அகப்பட்டு வருந்துஞ் சிறையிலிருந்து அவர்களை நீக்காமலும் நான் உன்னுடன் உயிர்தப்பி இங்கேவந்து [illegible]யது அரசதருமமாகமாட் [illegible] அந்தச் சூரன் முதலிய அசுரர்களைக் கொல்லவேனும் வெல்லவேனும் அரிபிரமராலும் முடியா; பரமசிவனொருவரே அசுரரைப்போக்கவும் எங்களைக் காக்கவும் வல்லவர்; ஆனதினால் அந்தப்பரமசிவன்சாந்நித்தியமாய் எழுந்தருளியிருக்குங் கைலைக்கு இங்கு வந்துள்ள இத்தேவர்களுடன் போய்க் கைலாசபதியைப் பணிந்து என் குறையை முறையிட்டால், அவர் திருவுளமிரங்கி எங்களுக்கு அருள்புரிவர். நான் கைலைக்குப்போய் மீண்டுவருங்காறும் அப்பரமபதியைத் தியானித்துக்கொண்டு பயப்படாமல் இங்கேதானே இருக்குதி; இதனை உன்னிடஞ் சொல்லிப் போதற்கே இப்பொழுது வந்தேன்" என்று கவலைகூரச் சொன்னான்.

நாயகன்சொன்ன வார்த்தையைக் கேட்டவுடனே, இந்திராணி சித்தங் கலங்கி நிலத்திலே வீழ்ந்தாள்; சகித்தற்கரிய வெய்யதுயர்க்கடலில் ஆழ்ந்தாள்; அறிவுசோர்ந்தாள். தன்னுயகனை எக்காலத்தும் பிரியாது வாழ்ந்தவள், பாவம்! என்செய்வாள்! அவள் சோர்ந்து வீழ்ந்து கிடத்தலைக் கண்ட இந்திரன் மனம் திடுதிடுத்து அவளைத் தன் இருகரங்களாலும் அணைத்தெடுத்துச் சைத்தியோபசாரமெல்லஞ் செய்து தன் மடிமிசையிருத்தித் தேற்றினான்; ஒருவாறு தேறிய இந்திராணி சிந்தை வருந்தினளாய்த் தன் நாயகனைப் பார்த்து:-

"என்னுருபிரே, சுவர்க்கலோகத்திலே அநுபவித்த போக போக்கியங்களை யெல்லாமிழந்து அந்நாட்டினையும் விட்டகன்று இம் மண்ணுலகத்தை யடைந்து இச் சீகாழிவனத்தில் இருக்கின்றேனாயினும், தேவரீரும் உடனிருக்கின்றீர் என்ற காரணத்தினால் எவ்வகையான கிலேசமுமின்றி வாழ்கின்றேன்; இப்படி இருக்குந் தமியேனைத் தேவரீரும் விட்டுப் பிரிந்து போனால், என்கதியென்னவாய் முடியுமோ அறிகிலேன்; கவலைக்கடலில் மூழ்கிக்கிடக்குந் தமியேன், தேவரீர் அருகிருந்து சொல்லும் ஆறுதல் மொழிகளினால் ஒருவாறு தேறுதலடைந்துவந்தேன்; என் அரிய துணைவரே, நீரன்றி வேறு யார் என் சோகத்தைத் தீர்ப்பவர்; தேவர்கோவே, நீர் கைலைக்குச் செல்லும் நோக்கத்தை யுத்தேசித்து நான் இந்தக்காட்டிலே ஒருவாறு தனியே இருக்கச் சம்மதிப்பேனாயினும, நான் துணையின்றித் தனியே யிருப்பதையுணர்ந்து தீதுகெட்டவர்களாகிய அசுரர்கள் இங்கேவந்தால் மானக்கேடும் தீராவசையும் வந்துசேருமல்லவா? செல்வங்களோடுகூடிய எங்கள் விண்ணுலகத்தை விட்டு இந்த மண்ணுலகத்திலே வந்து இவ்வனத்திற் கரந்திருந்து நாங்கள் தவம் புரிவதும், இப்படிப் படாதபாடு படுவதும, எண பிராணேசரே, என் மானமொன்றைக் காப்பதற்கென்பதை நீர் மறந்தீரோ,

"உன்னன் புடைய
ஒருமகனும் ஈங்கில்லை
துன்னுஞ் சுாருமில்லை
தோல்களிற்றின் வேந்துமில்லை

தொடர்ச்சி 4-ம் பக்கம்

# உண்மைச் சுதந்திரமல்ல

## சரத் போஸின் விளக்கம்

இந்தியாவிற்குச் சுயராச்சியம் வந்துவிட்டது என்றெல்லாம் இப்போது சொல்லுகிறார்கள்; ஆனால் இந்த நாட்டிலே உண்மையான பரிபூரண சுதந்திரம் இன்னும் ஏற்படவில்லை என்பதை மீண்டும் வற்புறுத்திக் கூறுகிறேன் என்று நேதாஜி சுபாஷ சந்திரபோஸின் சகோதரர் ஸ்ரீஜுத் சரத் சந்திரபோஸ சென்ற வாரம் சென்னையில் நிகழ்ந்த ஓர்கூட்டத்திற் கூறினார் அவர் மேலும் கூறியதாவது:

"இப்போது டொமினியன் அந்தஸது வழங்கப்பட்டிருக்கிறது. இந்த அந்தஸ்து இருக்கும்வரையில் பிரிட்டிஷாரும் இங்கே எப்படியோ அட்டைபோல ஒட்டிக் கொண்டிருப்பர் தான். பிரிட்டிஷ் இராஜதந்திரிகளின் தந்திரத்திலிருந்து நாம்தப்புவது மிகவும் கஷ்டம். சென்ற 150 ஆண்டு காலமாக பிரிட்டிஷ் இராஜதந்திரிகளே எம் பரம வைரிகளாகவிருந்தனர். அவர்கள தம் பிரித்தாளும் தந்திரத்தைக் கடைசிவரை கைக்கொண்டு, ஈற்றில் யூன்மாதம் 15-ந்திகதி தம் வழக்கப்படி இந்தியாவையே துண்டாடிவிட்டனர்.

"இந்தச் சீர்கெட்ட நிலைமைக்கு மருந்து என்ன? ஓர்சோஷலிஸற் குடியரசை இங்கு ஸதாபிப்பதுதான் சரியான மார்க்கம். ருஷியக் குடியரசைப்போல, இங்கேயும் ஓர் குடியரசைத் தாபித்தால், துண்டாடப்பட்ட இந்தியா மீண்டும் ஒன்றாகலாம். இந்த டொமினியன் அந்தஸ்துப் பிரேமையை மக்கள் மனத்திலிருந்து முதலில் அகற்றவேண்டும்".

# தாயின் மணிக்கொடி

## எல்லார்க்கும் பொதுவாகவேண்டும்

கொழும்பு கொட்டடித்தெரு 156, திரு. எஸ. சிவசுப்பிரமணியம பின் வருமாறு எழுதுகிறார்:-

எங்கள் இலங்கைக்குக் கூடிய சீக்கிரத்திற் சுதந்திரம் வரும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்தச் சந்தர்ப்பத்திலே, எங்கள் நாட்டுக்குகந்த ஏற்ற ஓர் தேசீயக்கொடியை நிர்மாணிக்கும் வேலையில் ஈடுபடுவது முறையாகும்.

இவ்விஷயத்தில் நாம் விஷயத்தை

தொடர்ச்சி 4 ம் பக்கம்

# நான் ஏன் ஹிந்துவானேன்?

[வி. ஞானமணி பட்டங்கெட்டியார்]

சுமார் 60 வருஷ காலமாகக் கிறிஸ்துவ மதத்தைப் பின்பற்றிய ஒரு குடும்பத்தில் பிறந்து சிறிது காலத்திற்குமுன் (27-7-47) தொண்டன் ஆசிரியர் கெ. ஆறுமுகநாவலரவர்களால் மதமாற்றப்பட்டேன் என்பதை முதலில் வாசகர்களுக்கு ஞாபகமூட்டுகிறேன்.

நான் பள்ளிப்பருவமா யிருக்கும் போது என் இள இருதயத்தில் இந்துக்களைப்பற்றி, அஞ்ஞானிகள், பாவிகள், விக்கிரக ஆராதனைக்காரர்கள் என்பனபோன்ற வசைமொழிகளாகிய விஷவித்துக்களை, பாதிரிகள் உபதேசியார்கள் போன்ற கிறிஸது மதக் கூலிப் பிரசாரகர்களால்விதைக்கப்பட்டன. இந்த விஷவித்துக்கள் முளைத்து இந்துக்களுடன் நெருங்கிப் பழகவிடாமல் தடுத்ததுடன் பகுத்தறிவற்ற கூட்டமென்றும் தான் தடைப்பிடித்தொழுகும் கொள்கையே உயர்ந்ததென்ற இறுமாப்பும் அடையச் செய்தது. மேல்நாட்டார்களால் பின்பற்றக்கூடிய ஒருமதம் தலைசிறந்ததாகத்தா னிருக்கவேண்டுமென்ற ஒரு பொதுவான அபிப்பிராயம் என்னை விழுங்கியிருந்தது நாளாகஆக இந்துக்கள் நடையுடை பாவனை ஒவ்வொன்றிலும் மூடநம்பிக்கைகளும் அநாகரிகங்களும் நிறைந்த ஒரு மதத்தைப் பின்பற்றிய கூட்டமென்ற வெறுப்புணர்ச்சி என் மனதைத் தாக்காமலில்லை. என் அதிர்ஷ்ட வசத்தால் சுவாமி விவேகானந்தரின் வாழ்க்கை நிகழ்ச்சிகளும் சிக்காகோ பிரசங்கமும் படிக்க நேர்ந்தது. நண்பர் ஒருவரின் உதவியால் நடுநிலைமையுடனும் ஆர்வத்துடனும் ஷெ சரித்திரங்களைப் படித்து முடித்தேன். அன்றிலிருந்து இந்து மதத்[illegible]

[illegible] பக்கம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாம்அர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம், சர்வசித்து ஆடு

புரட்டாதி மீ எவ செவ்வாய்க்கிழமை

## புதிய பாராளுமன்றம்

இந்தச் செப்டெம்பர் மாசம் 20-ந் திகதியோடு இலங்கைப் புதிய பாராளுமன்றத்திற்காகிய பிரதிநிதிகளைத் தேர்தலாகிய கருமமும், நேற்றைத் தினத்தோடு இன்னின்னார் இன்னின்ன பகுதிக்குப் பாராளுமன்றத்துப் பிரதிநிதிகளாகத் தேர்தல் செய்யப்பெற்றிருக்கின்றனரென்பதும் தீர்க்கமாக அறியப்படலாயின; தேர்தற் காலத்தில் எந்தக் கட்சியிலாயினும் சேர்ந்து தேர்தற்கு முற்பட்டு நின்றவர்களைப்பற்றியும், ஒருகட்சியிலும் சேர்தலின்றிச் சுயேச்சையாகத் தேர்தற்கு முற்பட்டு நின்றவரைப்பற்றியும் அநுகூலமாகவேனும் பிரதிகூலமாகவேனும் எவ்வகையான குறிப்பையும் அபிப்பிராயத்தையும் வெளியிட்டிலேம்; காரணம் பத்திரிகை பொதுமை வகித்து நடைபெறவேண்டுமென்பதே; இனிமேலும் நாம் இந்தப் பாராளுமன்ற விவகாரத்திலே பொதுமை வகித்துநின்று காலந்தோறும் கருமங்களை ஆராய்ந்து உள்ளதை உள்ளபடி எடுத்துக்காட்டுதலும், செய்யத்தக்கன இவை செய்யத் தகாதன இவை, ஆவசியகஞ் செய்ய வேண்டியன இன்னின்னவை என்பவற்றை நடுவுநிலைமையோடு எடுத்துக்காட்டுதலுமே நியதியெனக் கொண்டுள்ளேம்.

புதிய பாராளுமன்றத்திற் சனப்பிரதிநிதிகளாகத் தேர்தல் பெற்று நிற்பவர்களுடைய நாமங்கள், அவர்கள் சேர்ந்துள்ள கட்சிகள், சுயேச்சையாய் நின்றுள்ளவர்களாகிய இவ் விபரங்கள் தேர்தல் ஆரம்பகாலந் தொட்டு இற்றைவரையில் இப்பத்திரிகையில் வெளிவரலாயின; ஒவ்வொரு கட்சியிலும் தேர்தல் செய்யப்பெற்ற பிரதிநிதிகளின் தொகைகளைக் கணக்கிடுங்கால், ஐக்கிய தேசியக் கட்சியினர் முதலாவதாக எக் கட்சியினரேனும் தனிக்கட்சியாக நின்று பாராளுமன்றத்தைக் கூட்டியாரம்பிப்பதற்குப் போதிய தொகையினரல்லரென்பது தெளியக் கிடக்கின்றது; ஆதலினால் இப்பொழுதுள்ள கட்சி பேதங்களுட் கூடியதொகையினராகிய ஐக்கிய தேசியக் கட்சியினரேனையகட்சியினருள் ஒரு கட்சியினரைமாத்திரமோ, இல்லையேல் ஒன்றிற்கு மேற்பட்ட கட்சியினரையோ சேர்த்தேனும், சேர ஏற்றேனும் பாராளுமன்ற அரசியன் முறையை ஆக்கவேண்டிய நிலையிலானார்களெனலாம்; இப்பொழுதுள்ள பலதிறப்பட்ட கட்சியினருள் ஐக்கிய தேசியக் கட்சியினர், சுயேச்சையினர், இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியினர், இலங்கை இந்தியக் காங்கிரஸ் கட்சியினர் என்னும் நான்கு பகுப்பினரை யொழிய சமசமாஜக் கட்சியினர் முதலிய கட்சியினரை யெல்லாம் இடதுசாரிக் கட்சியினரென ஒரு பொதுநாமமே கொடுத்து வழங்குகின்றார்கள்.

அந்த இடதுசாரிக் கட்சியினர் எப்பொழுதும் எதிர்ப் பகுதிக் கட்சியென்ற பெயரோடு நின்று, பாராளுமன்றத்திலே எதிர் நியாயம் பேசி அதனைக் காலந்தோறுந் திருந்தி நடக்கச் செய்வார்களே யன்றி, முந்திச் சொல்லப்பட்ட அந்நான்குகட்சியினருள் எக்கட்சியினரோடாயினும்சேர்ந்துழைக்கமாட்டார்களென்றகொள்கையுமுண்டு; ஆனதால்முதலெடுத்துக்காட்டப்பட்ட ஐக்கிய தேசியக் கட்சினர் பாராளுமன்றத்தை ஆரம்பிக்கும் போது சுயேச்சையினர் இலங்கைத் தமிழ்க்காங்கிரஸ் கட்சியினர், இலங்கை இந்தியக் காங்கிரஸ் கட்சியினர், என்னுமிக் கட்சியினருள் ஒருகட்சியினரையோ இல்லையேல்ஒன்றுக்குமேற்பட்ட கட்சியினரையோ சேர்த்தேனும் சேரச்செய்தேனும் பாராளுமன்றத்தைத் தாபிப்பதே செய்யத்தக்கதாகும். இதற்கிடையிற் சுயேச்சையினரைச் சேர்ந்தவர்களாகிய 21 பேரையும் சேர்த்து ஒரு தனிக் கட்சியாக்குதற்குரிய முயற்சிகள் நடைபெறுகின்றனவெனவும் அறியலானேம்.

இந்தப் பல்வகைக் கட்சியினர் பிரதிநிதித் தேர்தற் காலத்திலே தத்தம் கொள்கைகளைத் தனித்தனியே போற்றியும், மற்றைக் கட்சியினர் கொள்கைகளைத் தூற்றியும், ஒருவரையொருவர் நிந்தித்துங் கண்டித்தும தேர்தற் கருமத்தை யாற்றினரென்பது மெய்; ஆனாற் தேர்தற் காலங்களிலே இப்படியான போற்றுதலுந் தூற்றுதலும், பாராட்டுதலுங் கண்டித்தலும், புகழ்தலும் இகழ்தலும், இசையும் வசையும் வருதல், எந்த நாட்டிலும் எந்தச் சாதி மக்களுள்ளும் நேர்தல் சகசம்; இலங்கைக்கும் இலங்கை மக்களுக்கும் மாத்திரம் புதியனவென்று எண்ணிக் கொள்ளவொண்ணாது; தேர்தல் முடிந்தபின் அந்த நாடுகளிலும் அந்நாட்டு மக்களிடத்தும் இம்மாறுபாடுகள் ஒரு அளவிற்கு ஒழிந்துபோக, பாராளுமன்றம் போன்ற அரச பரிபாலனங்களில் அவர்களெல்லாம்ஒருங்கு சேர்ந்து திறமையுடன் பரிபாலனத்தை நடத்துதலும் சகசமாகும்; ஆதலினால் இலங்கையிலுள்ள எவ்வகைக் கட்சிப் பிரதிநிதிகளும், அவ்வகைக் கட்சி அபேட்சகர்களின் பொருட்டுப் பாடுபட்டு உழைத்த மக்களும் "போனவை போகட்டும்" என அப்படியான வித்தியாசங்களையெல்லாம் மறந்து ஐக்கியப்பட்டு இலங்கை மக்களின் ஈடேற்றத்தையும் சுயாதீனத்தையும் உத்தேசித்து உழைப்பரென எண்ணுகின்றேம்.

## இன்னும் முடிவில்லை

### ஜீ. ஜீ. நிலைமையை விளக்குகிறார்

தமிழ்க்காங்கிரஸ் இலங்கைப் புதிய அரசியலில் எவ்விதமான நடைவடிக்கைகளைக் கையாளும்? ஐ. தே கட்சியுடன் ஒத்துழைக்குமா? அல்லது இடதுசாரிக் கட்சிகளுடன் சேர்ந்து எதிர்க்கட்சியில் தான்நிற்கப்போகிறதா? என்னும்இன்னோரன்ன பலவிதமான செய்திகள் பத்திரிகைகளில் பிரசுரமாயின. இந்தச் செய்திகள் ஒன்றுக்கும் ஆதாரமேயில்லை என்று சென்ற ராம்-ஸ்ரீகனகரத்தினத்தின் தேர்தல் விபரம் அறிவிக்கப்பட்டபின் ஜீ ஜீ. பட்டவர்த்தனமாகத் தெரிவித்துவிட்டார். அப்போது அவர் தெரிவித்ததாவது:

"இலங்கையரசியலின் எதிர்காலம் சம்பந்தமாகவும் மந்திரசபை அமைப்பு விஷயமாகவும், என்பெயரும், தமிழ்க்காங்கிரஸ் பெயரும் பலவிதமாகப் பிரஸ்தாபிக்கப்படுகின்றன. நான் தமிழ்க்காங்கிரஸ் சார்பாகவோ அல்லது என் சொந்தப் பொறுப்பிலோ, மந்திரசபை அமைப்பு விஷயமாக எக்கட்சியுடனும் இன்னும் பேச்சுவார்த்தை வைத்துக்கொள்ளவில்லை பத்திரிகைகள் அப்படிச்செய்வார், இப்படிச் செய்வார் என்ற ஜோசியம் கூறினால் பொதுஜனங்கள் அதனை நம்பக்கூடாது என்று கேட்டுக் கொள்ளுகிறேன்."

சென்ற சனிக்கிழமை ஸ்ரீ பொன்னம்பலம் கொழும்பு "டைம்ஸ்" பத்திரிகை நிருபருடன், இப்போதுள்ள அரசியற் பிரச்சினை சம்பந்தமாகச் சில தெரிவித்தார். அவர் த. காங்கிரஸ் சார்பாகவன்றி தன் சொந்தப் பொறுப்பில் தெரிவித்ததாவது:

"இன்று அரசியல் நிலைமை இன்னும் தெளிவாகவில்லை. தேர்தல் முற்றாக முடிந்தபோதிலும், அந்த நிலைமை தெளிவடையமாட்டாதுபோல இருக்கிறது. எந்த அரசியற்கட்சியாவது தன் சொந்தப் பலத்தில் அரசாங்கத்தை நடாத்தக்கூடியதாக இல்லை. இந்தத் தெளிவற்ற நிலைமையைப் போக்கி, மக்களின் உண்மையான தேவைக்குகந்த பிரச்சினைகள் எவை எவை என்பதை ஆராய்ந்து ஓர் முடிவுக்கு வருதல் இலங்கை அரசியல்வாதிகளை இப்போது பொறுத்துள்ள கடனாகும். இந்த விஷயத்தில் இலங்கை அரசியல்வாதிகள் அனைவரும் ஒன்றுசேர்ந்து ஓர் வழிக்குவரவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

"இப்போது நடந்துமுடிந்த தேர்தல் ஒரு விஷயத்தை மிகவும் துலாம்பரமாகக் காட்டியிருக்கிறது. ஸோல்பெரிக் குழுவினரால் இங்கே புகுத்தப்பட்ட, மிஸ்ரர் சேனநாயக்காக் கோஷ்டியினரால் வரவேற்கப்பட்ட அரசியல்திட்டம் இந்த நாட்டுக்கு வேண்டவே வேண்டாம் என்பதை நாட்டுமக்கள், இத்தேர்தல்மூலமாகப் பட்டவர்த்தனமாகத் தெரிவித்துவிட்டனர். ஆகவே இந்தத் திட்டத்தைக் குப்பைத்தொட்டிக்குள் வீசி எறிந்துவிட்டு எம்நாட்டுக்குகந்த ஓர் அரசியலை-அந்நியர் தலையீடின்றி நாமே அமைத்துக்கொள்ள வேண்டும். அதற்கான அரசியல் நிர்மாண சபையை நாம வகிக்கவேண்டும். இடைக்கால அரசாங்கம் ஒன்று ஸ்தாபிக்கவேண்டும்.'

## ஊர்காவற்றுறைத் தேர்தல்

### வழக்குத் தொடரப்பட்டது

ஊர்காவற்றுறைத் தொகுதியிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட மிஸ்ரர் அல்பிரட் தம்பிஐயாவுக்கு விரோதமாக திரு. ஏ. வி. குலசிங்கத்தினால், ஓர் வழக்குத் தொடரப்பட்டிருக்கிறது. குறித்த மிஸ்ரர் தம்பிஐயா, தான் தேர்தலுக்கு அபேட்சகராக நின்ற காலத்தில் அரசாங்க ஒப்பந்தகாரராகவிருந்து, அரசாங்கப் பணம் பெற்றாரென்றும், அவருடைய சம்மதத்தின்பேரில் அல்லது அவர்க்குத் தெரியத்தக்கதாக அவருடைய தேர்தற் பிரதிநிதிகளால், லஞ்சங் கொடுக்கப்பட்டதென்றும் ஸ்ரீ குலசிங்கம் தம் முறைப்பாட்டிற் குறிப்பிட்டிருக்கிறார்.

இந்த வழக்கு சுப்பிறீம்கோட்டில் விசாரணை செய்யப்படும்.

அம்பலாங்கொடையி லிருந்தும் மிஸ்ரர் வில்லியம் சில்வா என்பவர்க்கு விரோதமாக ஓர் தேர்தல் மனுச் சமர்ப்பிக்கப் பட்டிருக்கிறது.

வவுனியா முல்லைத்தீவுப் பகுதியி லிருந்து வெற்றிபெற்ற ஸ்ரீ சுந்தரலிங்கத்துக்கெதிராகவும் வழக்குச் சமர்ப்பிக்கப்படுமாம்.

# முடிந்துவிட்டது

## தேர்தலிற் கட்சிகள் நிலை

சென்ற ஒருமாத காலமாக இந்த இலங்கையைப் பீடித்திருந்த தேர்தல் வியாதி சென்ற சனிக்கிழமையுடன் ஓய்ந்துவிட்டது.

சென்ற சனிக்கிழமை நிகழ்ந்த தேர்தலின் பிரதான அம்சங்கள்வருமாறு:

கொழும்பு தெற்கில் திரு. பீ. சரவணமுத்து தோற்க, ஐ தே. கட்சியபேட்சகரும் முந்திக் கொழும்பு மேயருமாகவிருந்த மிஸ்ரர் ஆர். ஏ. டி. மெல் வெற்றிபெற்றார்.

கொழும்பு மத்தியபகுதியில்மூன்று அங்கத்தவர்கள் தெரியப்பட வேண்டிய ஸ்தானத்துக்கு 15 பேர் போட்டியிட, அவர்களில் மிஸ்ரர்ஏ. ஈ. குணசிங்க, ஜனாப் ரீ. பீ. ஜயா, மிஸ்ரர் பீற்றர் கெனமன் என்னும் மூவரும் வெற்றியடைந்தனர், இந்த மூவரில் மிஸ்ரர் ஜயா ஐ. தே. கட்சியைச் சேர்ந்தவர். மிஸ்ரர் குணசிங்கி தொழிற்கட்சியைச் சேர்ந்தபோதிலும், ஐ. தே. கட்சியுடனேயே ஒத்துழைப்பதாகக் கூறுபவர். மிஸ்ரர் கெனமன் சமதர்மக் கட்சியைச் சேர்ந்தவர்.

வெள்ளவத்தை கல்கிசைத் தொகுதியில், போல்ஷெவிக் லெனின் கட்சித் தலைவர் டக்ரர் கொல்வின் ஆர் டி. சில்வா தெரிந்தெடுக்கப்பட்டார்.

இப்போதுள்ள கட்சி நிலைமை வருமாறு:

| | |
|---|---|
| ஐ. தே. கட்சி (மிஸ்ரர் குணசிங்கியுட்பட) | 43 பேர் |
| சமசமாஜிகள் | 10 ,, |
| போல்ஷெவிக் லெனின் க. | 5 ,, |
| இந்தியக் காங்கிரஸ் | 6 ,, |
| தமிழ்க் காங்கிரஸ | 7 ,, |
| சமதர்மிகள் | 3 ,, |
| சுயேச்சை வாதிகள் | 21 ,, |

## வருமானவரி

### அதனை அதிகரிக்கவேண்டும்

கல்கிசை, வெள்ளவத்தைத் தொகுதியில் இருந்து வெற்றிபெற்ற போல்ஷெவிக் லெனின்கட்சித் தலைவர் டக்ரர் கொல்வின் ஆர். டி. சில்வா தமது வெற்றிக்குப் பின் பேசியபோது, தனதுவெற்றி தொழிலாளரின் வெற்றியென்றும், முதலாளி வர்க்கத்துக்குத் தலையில் ஓர் அடியென்றும் குறிப்பிட்டார். அவர் மேலும் பேசுகையில் இன்று இலங்கையிலே முதலாளி வர்க்கமும் அதன் பெருந் துணையாகிய ஐக்கிய தேசீயக கட்சியும் ஏழை மக்களைக் கசக்கிப் பிழிந்து ஏப்பமிட்டு வந்திருக்கின்றனவெனவும், இனியும் அப்படியான நிலைமை ஏற்படாமல் தனது கட்சி முதலாளி வர்க்கத்தின் பணத்தைப் பொதுஜனங்களின் உபயோகத்துக்காகச் செலவழிக்கச்சட்டமியற்றத் தெண்டிக்கும் என்றும் அதில் ஒன்று வருமானவரியை அதிகரிப்பதே என்றும் குறிப்பிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியலில் தமிழர் நிலை என்ன?

## தமிழ்க் காங்கிரசும் மந்திரசபையும்

### ஒத்துழைப்பா? பகிஷ்காரமா?

[ நமது அரசியல் நிருபர் எழுதுகிறர் ]

ஒருமாதகாலமாக இலங்கை அரசியல் வானத்தை அமர்க்களப்படுத்திய தேர்தலும் ஒருவாறு முடிந்துவிட்டது. சோல்பெரித்திட்டத்தின்படி மந்திரசபையை அமைத்து அரசியல் நிருவாகத்தை நடத்தவேண்டியதே பாக்கி. இந்த அரசியலை நடத்துவது யார்? என்ற கேள்வி இப்போது எழுந்திருக்கிறது. மிஸ்ரர் செனனுயக்காவைத்தலைவராகக்கொண்ட ஐக்கிய தேசியக் கட்சிதான் இன்றுள்ள நிலைமையில் பெரும்பான்மைக் கட்சியாக இருந்தபோதிலும், அது தனியே சர்வாதிகாரம் செலுத்தி அரசியலை நிர்வகிக்கும் வலிமையுடையதாக இப்போது இருக்கவில்லை. மந்திரசபை அமைப்பு விஷயத்தில் அது வேறும் கட்சிகளின் உதவியையும் ஒத்துழைப்பையும் நாடவேண்டிய ஓர் நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. ஐக்கிய தேசியக் கட்சிக்கு அடுத்தபடியாக இடதுசாரிகளின் கட்சி அதிக பலமுடையதாக விருந்தபோதிலும், அவ்விடதுசாரிகளுக்குள்ளேயிருக்கும் பரஸ்பர பிணக்குக் காரணமாக அவர்களுக்கிடையே ஒற்றுமை என்பது இல்லை. அப்படி ஒற்றுமை ஏற்பட்டாலும், அவர்கள் மிஸ்ரர் செனனுயக்காவுடன் ஒத்துழைப்பதும், அந்த ஒத்துழைப்பை மிஸ்ரர் செனனுயக்கா நாடுவதும் துர்லபம். அரசியல் பொருளாதார விஷயமாக அவர்கள் இரு சாரார்க்குமிடையேயுள்ள அபிப்பிராயபேதம் மலைக்கும் மடுவுக்குமிடையில் உள்ள அத்தகைய பெரிதாக, தீர்க்க முடியாததாக இருக்கிறது; மேலும் இலங்கையின் பொருளாதார நிலைமை இன்று மிகவும் மோசமாக இருக்கிறது. இன்னும் சில காலத்தில் முன்னொருபோதுமில்லாத ஓர் பொருளாதார நெருக்கடி இலங்கையைப் பீடிப்பதற்கான உற்பாதங்கள் இப்போதே ஏற்பட்டிருக்கின்றன: ஆகவே இந்தச் சந்தர்ப்பத்தில் பொறுப்பையேற்று அதனுல் வரும் பலாபலன்களுக்கு ஜவாப்தாரிகளாக இருக்க இடதுசாரிகள் தயாராக இல்லை; நிருவாகப் பொறுப்பை மிஸ்ரர் செனனுயக்காவின் தலையிலோ, மற்றவர்கள் தலையிலோ சுமத்திவிட்டு, அதனுல் வரும் தீமைகளை அம்பலப்படுத்தி, "முதலாளிவர்க்க" அரசாங்கத்தைப் பொதுஜனக் கிளர்ச்சி மூலமாகக் கவிழ்க்கவே சமசமாஜிகள் முதலாம் இடதுசாரிகள் முயற்சி செய்வான்றி, இப்போது நிருவாகப் பொறுப்பை மேற்கொள்ளமாட்டார்கள்.

○

**நெல்லிக்காய் மூடை**

அடுத்ததாகச் சுயேச்சை வாதிகள்தான் பெரும்பான்மையினராக விருக்கின்றனர். இவர்கள் ஓர் கட்சிக் கட்டுப்பாட்டுக்கும் அடங்காதவர்கள். மூடையில் இருந்து அவிழ்க்கப்பட்ட நெல்லிக்காய் போல நாலா பக்கங்களிலும் சிதறுண்டிருப்பவர்கள் இவர்களைத் தன் கட்சியிற் சேர்த்து அவர்கள் உதவியுடன் அரசியல் நிர்வாகத்தை நடாத்த மிஸ்ரர் செனனுயக்கா ஒருசமயம் முயற்சிக்கலாம். ஆனுற் கட்சிக் கட்டுப்பாடில்லாத இவர்கள் வாளா ஒத்துக்கொள்ளமாட்டார்கள். இவர்களை "விலை கொடுத்து" வாங்கவேண்டும். இவர்கள் எல்லார்க்கும் விலைகொடுக்க—அரசியலிற் பதவிகள் கொடுக்க மிஸ்ரர் செனனுயக்காவினுல் முடியுமா? எனவே இவர்களுக்கிடையே முதலில் பூரண ஒற்றுமை உண்டாக்கவேண்டும். அதன்பின் அவர்களைத் தனது கட்சியிற் சேர்க்க வேண்டும். அப்படிச் சேர்த்துவிட்டால் மிஸ்ரர் செனனுயக்கா நிம்மதியாக அரசியலை நடத்தலாம். அந்தக் கைங்கரியத்தில் மிஸ்ரர் செனனுயக்கா இப்போது துரிதமாக முயற்சிசெய்து அதில் வெற்றியடைந்தும் வருகிறுர் என்று பிந்திக் கிடைத்த செய்தி ஒன்று கூறுகிறது. இந்தச் சுயேச்சைவாதிகள் ஓர் கட்சியாகச் சேர்வதன் முடிவு இன்று திட்டமாகத் தெரியவரும்.

○

**இந்தியக் காங்கிரஸ்**

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ், இலங்கை இந்தியக் காங்கிரஸ் என்னும் இரண்டு ஸ்தாபனங்களும் அடுத்ததாகப் பெரும்பான்மையான ஸ்தானங்களைத் தனித்தனி பெற்றிருக்கின்றன. இவை இரண்டையும் சேர்த்தாலும் மிஸ்ரர் செனனுயக்காவுக்கு ஸ்திரமான அரசியலை அமைக்கமுடியும். இலங்கை இந்தியக் காங்கிரசைப் பொறுத்தவரையில், இலங்கைவாழ் இந்தியர்பிரச்சினையை மிஸ்ரர் செனனுயக்கா சமரசமாகத் தீர்த்துக்கொள்ள வேண்டும். உருளிவெளிச்சம்பவம்போன்ற விஷயங்கள் இனிமேலும் நடக்கா என்பதற்கு உத்தரவாதம் அளித்தல் வேண்டும். இலங்கையிற் குடியேறியுள்ள இந்தியர்க்குச் சம உரிமைகள் வழங்கவேண்டும் என்னும் இன்னோன்ன நிபந்தனைகளுக்கு மிஸ்ரர் செனனுயக்கா இணங்கினுல்தான் இலங்கை இந்தியக் காங்கிரஸ் ஒத்துழைக்க முன்வரும் ஆனுல் இந்த நிபந்தனைகள் மிஸ்ரர் செனனுயக்காவின் அடிப்படையான கொள்கைகளைத் தாக்குவதாகும்; தன் மூலாதாரக் கொள்கைகளை விட்டுக்கொடுத்து, இந்தியக் காங்கிரசின் ஒத்துழைப்பை மிஸ்ரர் செனனுயக்கா விரும்புவாரா? அப்படி அவர் விரும்பினுல் அவருடைய கிராம அபிவிருத்தித் திட்டம் முதலியனவற்றின் கதியென்ன?

○

**தமிழ்க் காங்கிரஸ்**

இப்போதுள்ள நிலையில் ஒரு சில சுயேச்சை வாதிகளும், சமதர்மிகளும் மிஸ்ரர் செனனுயக்காவுடன் ஒத்துழைக்கலாம். ஆனுல் பூரணமான பலம்—தமிழ் மக்களின் பரிபூரண ஆதரவு—அவருடைய அரசாங்கத்துக்கு இருக்கவேண்டுமானுல் அவர் தமிழ்க் காங்கிரசின் உதவியையும் ஒத்துழைப்பையும் நாடி அரசியல் நிருவாகத்தில் காங்கிரஸ் வாதிகளுக்குப் பங்கு கொடுத்து ஓர் கூட்டு மந்திரசபையை அமைக்கவேண்டும். மிஸ்ரர் செனனுயக்கா தமிழ்க் காங்கிரசுடன் சேருவதில் சிலகஷ்டங்கள் நுழைந்திருக்கின்றன. முதலாவது தமிழ்க் காங்கிரஸ் ஓர் வகுப்புவாத ஸ்தாபனம் என்றும், இந்த ஸ்தாபனத்தின் மூலம் வருபவர்களுக்குத் தாம் அரசியலிற் பங்கு கொடுக்க முடியாதென்றும், அன்று மிஸ்ரர் செனனுயக்கா ஐ. தே. கட்சி அங்குரார்ப்பணக் கூட்டத்திற் கூறியுள்ளார். அந்தக் கூற்றை இதற்கிடையில் மறந்து அல்லது மறப்பதாக நடித்துத் தமிழ்க் காங்கிரசின் ஒத்துழைப்பை மிஸ்ரர் செனனுயக்கா நாடுவாரா? இரண்டாவது தமிழ்க்காங்கிரஸ வாதிகளை மந்திரசபையிற் சேர்ப்பது ஐ. தே. கட்சியைச் சேர்ந்த ஓர் பகுதியினர்க்கு விருப்பமில்லையாம். தமிழ்க் காங்கிரஸ வாதிகளை எதிர்த்துப் போட்டியிட்டவர்கள் ஐ. தே. கட்சியிற் சேர்ந்திருந்தமையினுலேயே தோல்வியடைந்தவர், அவர்கள் ஐ. தே. கட்சியிற் சேராது சுயேச்சை வாதிகளாக நின்றிருப்பின் அல்லது தங்கள் கொள்கைகளைத் துறந்து தமிழ்க் காங்கிரசிற் சேர்ந்திருப்பின் வெற்றிபெற்றிருப்பர்; அப்படி அவர்களுடைய அரசியல் வாழ்க்கையைப் பலியிட்டு, தமிழ்க் காங்கிரசின் ஒத்துழைப்பை இப்போது நாடுவது முறையல்ல என்று இவர்கள் கூறுகின்றனர். எது எப்படியிருந்தபோதிலும் தமிழ்மக்கள் தம பிரதிநிதிகளாகவேண்டியவர்களைத் தெரிந்தனுப்பி விட்டனர்; ஆகவே, அவர்களை நாம் விரும்பினுல் என்ன, விட்டால் என்ன, தமிழ் மக்களின் பிரதிநிதிகள் என்ற தன்மையில் அவர்களையும் ஏற்று அவர்களுக்கு அரசியலிற் பங்கு கொடுக்கவேண்டும் என்று ஐ. தே. கட்சியின் இன்னோர் சாரார் கூறுகின்றனர்.

○

**காங்கிரசும் இடதுசாரிகளும்**

தேர்தல் மும்முரமாக இருந்தகாலத்தில் இங்கே தமிழ்க் காங்கிரஸ்வாதிகளும் ஐ. தே. கட்சியாளர்களும் பரஸ்பரம் தூற்றித் திரிந்த வசைமாரிகளை மறப்பதற்கில்லை ஆனுல் அந்த நிலைமை இப்போது மெல்லமெல்லவாக மாறி வருவதும், மிஸ்ரர் செனனுயக்காவுக்கும், தமிழ்க் காங்கிரசிற்குமிடையே ஓர் புதிய உறவு உருவாகி வருவதும் ஈண்டுக் குறிப்பிடத்தக்கன. தேர்தற் காலத்தில் தமிழ்க் காங்கிரசின் பிரசாரம் இடதுசாரிக் கொள்கையை ஓர் அளவுக்குத் தழுவியிருந்தது. இப்போது தமிழ்க்காங்கிரஸ்—சமசமாஜிகள் முதலாம் இடதுசாரிகளுடன் கொண்டிருந்த மறைமுகமான உறவு மெல்லமெல்லவாக அருகி சமசமாஜிகளின் கொள்கைகளைத் தமிழ்க் காங்கிரஸ்வாதிகள்சிலர்குறைகூறும் அளவுக்குவந்துவிட்டமை காற்று எந்தப்பக்கத்திலடிக்கிறது என்பதைஒருவாறு காட்டுகிறது. காங்கேசன் துறைப் பிரதிநிதியாகத் தெரிவு செய்யப்பட்ட ஸ்ரீ எஸ். ஜே. வி. செல்வநாயகம் தம் வெற்றித் தினத்தன்று பேசியமை கூர்ந்து நோக்கற்பாலது; அவர் அன்று சமசமாஜிகளின் புத்திமதி தமக்கோ தமிழ்க் காங்கிரசிற்கோ வேண்டியதில்லை என்றது, தமிழ்க்காங்கிரசின் போக்கை ஓரளவுக்குக் காட்டாநிற்கிறது எனலாம். எது எப்படியிருந்தபோதிலும் சமயசந்தர்ப்பத்துக் கேற்றவாறு நமது அரசியல் வாழ்க்கையை அமைத்துக்கொள்ளுதல் வேண்டும். ஓர்காலத்தில் பாகிஸ்தான் என்றவுடன், அந்தப் பேச்சுக்கும் இடம் கொடுக்கோம் என்ற இந்தியத் தலைவர்கள், இன்று அதே பாகிஸதானை ஆதரிக்கவில்லையா? நாமோ சிறுபான்மையினர்: காலப்போக்கை அநுசரித்து எம் கொள்கைகளை வகுக்கவேண்டுமன்றி, எட்டாத லட்சியங்களையிட்டுக் கொட்டாவி விடக்கூடாது.

○

**மந்திரசபையிற் பங்கு**

மந்திரசபையமைத்து அரசியலை நிருவகிக்கும் விஷயத்தில் தமிழ்க் காங்கிரசின் ஒத்துழைப்பையும் உதவியையும் மிஸ்ரர் செனனுயக்கா நாடினுல், தமிழ்க் காங்கிரஸ் செய்யவேண்டியது என்ன? எவர் எப்படிக் கூறியபோதிலும், இன்று தமிழ்க் காங்கிரஸ்தான் இலங்கைத் தமிழ்மக்களின் தனிப்பெரும் ஸ்தாபனம் என்பதை இப்போது எவரும் மறுக்கமுடியாது. கீழ் மாகாணத் தமிழர் தொகுதிகளுக்குத் தமிழ்க் காங்கிரஸ தன் அபேட்சகரை நிறுத்தவில்லைஎன்ற காரணம்பற்றியோ, அல்லது எல்லாத் தமிழ்மக்களும் அதிற் சேரவில்லை என்ற காரணம்பற்றியோ தமிழ்க் காங்கிரஸ் தன் பிரதிநிதித்துவ தன்மையை இழந்துவிட முடியாது. அது இன்னும் தன் பலத்தை அபிவிருத்தி செய்யவேண்டியது வேறு விஷயம். இப்போது ஏற்பட்டிருக்கும்பிரச்சினை ஒன்றேயொன்றுதான். தமிழ் மக்கள் அரசியல் நிருவாகத்திற் பங்குபற்றுவதா, அன்று? மிஸ்ரர் செனனுயக்காவுடன் ஒத்துழைப்பதா, அன்று? இந்தப் பிரச்சினையை நன்கு அலசி ஆராய்ந்து ஓர் முடிவுக்கு வருதல் தமிழ்மக்களது பெரும் கடமையாகும். சந்தர்ப்பம் நேர்ந்தால், தமிழ்க் காங்கிரஸ் மிஸ்ரர் செனனுயக்காவின் ஐக்கிய தேசியக்கட்சியுடன் சேர்ந்து ஓர் கூட்டு மந்திரசபையமைத்து அரசியலைக் கட்டாயம்நடத்தவேவேண்டும். இந்த அரிய சந்தர்ப்பத்தைக் கைநழுவ விடக்கூடாது. 1931-ம் ஆண்டிலே செய்ததுபோல மீண்டும் நாம் அரசியல் அநாதைகளாகவொண்ணுது.

---

## நான் ஏன் ஹிந்துவானேன்

முதலாம் பக்கத் தொடர்ச்சி

களை வேரோடு களைந்ததுடன் சுரண்டல் பேர்வழிகளாகிய பாதிரியார்களின் பகல வேஷமும் வெட்ட வெளிச்சமாயின. அன்றிருந்து எந்தக் கொள்கைகளையும் துருவியாராயாமல் மேலெழுந்தவாரியாகப் பார்த்த மாத்திரத்தில் வெறுப்பதில்லை என்ற நேர்மையான எண்ணம் உண்டாகி இந்து, கிறிஸ்தவ மதங்களைக் கூடுமானவகை யாராய்ந்து சுருதி யுக்தி, அனுபவத்திற்கொத்த ஒரு மதத்தைத் தெரிந்தெடுத்து வாழ்க்கையின் லக்ஷியமாகக் கொள்ள வேண்டுமென்ற அவா எழுந்தது.

—தொண்டன் (வரும்)

---

## இன்னோர் கட்சி

### சுயேச்சைவாதிகள் அமைப்பராம்

இன்று இலங்கைப் பாராளுமன்றத்தில் ஏறக்குறைய 20 பேர் சுயேச்சைவாதிகளாகத் தெரிவு செய்யப்பட் டிருக்கின்றுர்கள். இவர்கள் இப்போதுள்ள அரசியற் கட்சிகளிற் பற்றில்லாதவர்கள். இப்படி இனியும் சிதறுண்டு இருக்காமல் தாங்களே ஓர் அரசியற் கட்சியை அமைத்துக் கொண்டால், வருங்கால அரசாங்கத்தை ஆக்கவும் அழிக்கவும் முடியும் என்று இச் சுயேச்சைவாதிகள் கருதுகிறுர்கள். அப்படியான ஓர் கட்சியை அமைக்க இச் சுயேச்சைவாதிகள், ஸ்ரீ சுந்தரலிங்கம் தலைமையிற் கொழும்பிற் கூடினராம். அப்போது அவர்கள் ஓர் முடிவான தீர்மானத்துக்கும் வரவில்லை.

இன்று (செவ்வாய்க்கிழமை) அவர்கள் மீண்டும் கொழும்பிற் கூடுவர். சுயேச்சை வாதிகளில் இப்போது எல்லாச் சாதியாரும் சமூகத்தாரும் அடங்கியுள்ளனர்.

---

## ஒத்துழைப்பா? அன்று?

### பொதுஜனங்கள் அபிப்பிராயம் என்ன?

தமிழ்க்காங்கிரசின் எதிர்கால அரசியல் நடைவடிக்கைபைப்பற்றி ஆலோசிப்பதற்காக ஓர் பொதுக்கூட்டம் சென்ற ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரித் தமிழ் வித்தியாசாலையில் நிகழ்ந்தது. காங்கிரஸ் தலைவர் திரு. ஜீ ஜீ பொன்னம்பலம் அவர்கள் சமூகமாயிருத்தார். ஸ்ரீ இ. சிவகுருநாதர் தலைமைவகித்தார்.

தலைவர் தமது முன்னுரையில், யாழ்ப்பாண மக்கள், கடந்த தேர்தலில் அளித்த தீர்ப்பைப் பாராட்டி, இனியும் தமிழ்மக்கள் பூரணமான ஒற்றுமைகொண்டு கருமம் ஆற்றினுல்தான் தமிழ்மக்கள் தம் கௌரவத்துடனும் சுய மரியாதையுடனும் கடைத்தேற முடியுமென்றும் கூறி, காங்கிரஸ் தலைவர் திரு. பொன்னம்பலத்துக்கு வரவேற்புக் கூறினுர்.

திரு பொன்னம்பலம், தான் பொதுஜன ஊழியன் என்ற நியதியில் சமூகமளித்து எதிர்கால அரசியல் வாழ்க்கைபற்றித் தன்னைத் தெரிந்திருக்கும் பொதுஜனங்களின் உண்மையான அபிப்பிராயத்தை அறிவதற்தாகவே சமூகமளித்ததாகக் கூறிப் பின் வருமாறு தெரிவித்தார்

'இன்றுள்ள பிரச்சினை இரண்டு. இலங்கைப் பாராளுமன்றத்தில் ஐ. தே. கட்சி மந்திரசபையை அமைக்க முன்வருமானுல் அதனுடன் தமிழ்மக்களாகிய நாமும் சேர்ந்து ஓர் கூட்டு மந்திரசபையை அமைப்பதா? அல்லது அதிற் சேராமல் எதிர்க்கட்சியாக நிற்பதா? இது மிகவும் பாரதூரமான விஷயம் நன்கு ஆலோசித்துத் தீர்க்கப்படவேண்டியது.

"என்னைப் பொறுத்தவரையில மிஸ்ரர் செனனுயக்காவுடனே, ஐ. தே. கட்சியுடனே ஒத்துழைப்பது எனக்கு விருப்பமில்லை உதவாக்கரையான சோல்பெரித் திட்டத்துக்கு விரோதமாக மக்கள் இன்று வாக்களித்துவிட்டனர். இந்தத் திட்டத்தை உதறித் தள்ளிவிட்டுப் புதிய அரசியலை நாம் அமைக்கவேண்டும். அதற்கு ஓர் அரசியல் நிர்மாணசபை வகுக்கப்படவ் வேண்டும். இது என் சொந்த அபிப்பிராயம்.

"மிஸ்ரர் செனனுயக்கா. தனது ஐ.தே. கட்சியைக் கொண்டு தனியே அரசியலை நடாத்தமுடியாத நிர்ப்பந்தம் ஏற்பட்டுவிட்டது. அவர் சுயேச்சை வாதிகளையும் நம்பியிருக்கமுடியாது. அவருடன் சமசமாஜிகள் ஒத்துழைக்கமாட்டார்கள். ஆகவே, அவர் எங்கள் ஒத்துழைப்பையும், இந்தியக்காங்கிரசின் ஒத்துழைப்பையும் நாடலாம். அப்படி நாடினுல் நாம் செய்வது என்ன என்பதுபற்றிப் பொதுஜனங்களாகிய நீங்களே தீர்ப்பளிக்க வேண்டும்."

டக்ரர் கே ராஜா, பிறக்ரர் கே. கதிரவேலு முதலிய பலர் தமிழ்க் காங்கிரஸ் ஐ. தே கட்சியுடன் ஒத்துழைத்து கூட்டு மந்திரசபையை அமைதல் வேண்டும்

தொடர்ச்சி 4ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒத்துழைப்பா? அன்று?

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

என்று அபிப்பிராயம் கூறினர். ஒத்துழைப்பு என்றால் அடிமைத்தனமல்ல, எங்கள் சுயமரியாதையையும், கௌரவத்தையும் பங்கப்படுத்தாத முறையில் சமத்துவநிலையில் சகோதரத்துவ பாவனையுடன் நாட்டின் பொதுநன்மைகருதி ஒத்துழைப்பது அவசியம் என்று அவர்கள் கூறினர்.

ஸ்ரீ த. முருகுப்பிள்ளை, ஐ. தே. கட்சியுடன் தமிழ்க் காங்கிரஸ் ஒத்துழைக்கவே கூடாதென்றும், அப்படி ஒத்துழைத்தால் எம் கௌரவத்துக்கே தீங்கு ஏற்படுமென்றும், எதிர்க்கட்சியில் இருந்துகொண்டே நாட்டுக்கு இதுவரை இடுக்கண் விளைத்த சேனநாயக்காக் கும்பலை அரசியலிலிருந்து விரட்டிவிட முயற்சி செய்து வெற்றி பெறவேண்டும் என்று கேட்டுக்கொண்டார். இன்னும் அவர் தெரிவித்ததாவது:

"தமிழ்க் காங்கிரஸ உண்மையான ஓர் தேசிய ஸதாபனம்; பொது மக்களுக்கு—தொழிலாளர்க்கு—அவர்கள் சிங்களராயினும் சரி, தமிழராயினும் சரி—உண்மையான சேவை செய்வதையே லட்சியமாகக் கொண்டது. அப்படிப்பட்ட ஓர்மகத்தான இந்த ஸதாபனம் 16 வருஷ காலம் காட்டைக் கசக்கிப் பிழிந்து, அதன் செல்வத்தை விருதாவிற் செலவழித்து, ஏகாதிபத்திய அடிமைக் குழியில் தள்ளிய ஓர் சுயநலக் கும்பலுடன் ஒத்துழைப்பதாயின் அதனைப்போன்ற அவமானம்தரும் செயல் பிறிதொன்றில்லையெனலாம். அப்படி நாம் செய்வோமேயானால், எங்கள் வாக்குறுதியெல்லாம் எங்கே? தென்னிலங்கையில் உள்ள தொழிலாளச் சகோதரர்க்கு நாம் அளித்த ஒத்துழைப்பு வாக்குகள் எங்கே? எங்கள் பூரண சுயராஜ்யக் கொள்கை எங்கே?"

ஸ்ரீ முருகுப்பிள்ளையை இன்னும் சிலர் ஆதரித்துப் பேசினர்:

இரு கட்சிக் கூற்றுக்களையும் ஸ்ரீ பொன்னம்பலம் கேட்டு, தான் வருகிற புதன் கிழமை கொழும்புக்கு விஜயம்செய்து அரசியல் நிலைமையை நேரே அவதானித்த பின். மீண்டுவந்து தன் அபிப்பிராயத்தைப் பொதுமக்களுக்குக் கூறுவதாகவும், அதற்கிடையில் பொதுஜனங்கள் பூரண ஒற்றுமைகொண்டு ஒருமித்த அபிப்பிராயத்துடன் தனக்குக் கட்டளை விதிக்கவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்.

இதற்கான நடைவடிக்கைகளைக் கையாள ஓர் நிருவாகசபை தெரிந்தெடுக்கப்பட்டது. ஸ்ரீமான்கள் வீ. சிவசுப்பிரமணியம், கே. கதிரவேலு என்பவர்கள் அதற்குக் காரியதரிசிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

## தாயின் மணிக்கொடி

1-ம் பக்கத் தொடர்ச்சி

உள்ள உள்ளவாறு காய்தல் உவத்தல் அகற்றி ஆராயவேண்டும்.

பாராளுமன்றத் தேர்தல்களும் முடிந்துவிட்டன. இனி, வகுப்புப் பற்றற்ற, ஐ. தே. கட்சியும், இடதுசாரிக்கட்சிகளும், ஏனைய தேசிய ஸதாபனங்களும் ஒருங்குசேர்ந்து இந்தத் தேசியக்கொடியை உருவாக்கும் முக்கிய விஷயத்தில் ஈடுபடவேண்டியது அவசியமாகும். இக்கொடி ஓர்சாதியார், ஓர் சமூகத்தார்க்கு மாத்திரம் அன்றி, இலங்கையைத் தாயகமாகக் கொண்ட சகல மக்களுக்கும்பொதுவானதாக, அவர்கள் எல்லாரும் பேதமின்றி, இது நம் "தாயின் மணிக்கொடி பாரீர், அதனைத் தாழ்ந்து பணிந்து வணங்கிட வாரீர்;" என்று புளகாங்கிதத்துடன் வணங்கிப் போற்றிசெய்யும் பெற்றியதாக இருத்தல்வேண்டும்.

இன்று சிங்களர்க்குரிய சிம்மக் கொடியை நாம் கௌரவிக்கிறோம் தான். ஆனால் அது இலங்கைமக்கள் அனைவர்க்கும் பொதுவானதல்ல என்பதை ஒத்துக்கொள்ள வேண்டும். அது ஒரு சமூகத்தவர்க்கு மாத்திரமே சொந்தமானது. இப்போது எமக்கு வேண்டியது எல்லார்க்கும் பொதுவான ஓர் தேசியக் கொடியேயாம்.

## ஐயனார் மகத்துவம்

முதலாம் பக்கத் தொடர்ச்சி

பின்னிங்கொரு மாதருமில்லை
பெண்ணொருத்தி
தன்னந் தனியிருக்க
அஞ்சேனோ? தக்கோனே."

"வேள்விக் கிறைவரே, நீர் அதிக அன்பு பாராட்டும் எங்கள் மகனும் இந்த நேரம் இங்கேயில்லை; வேறு தேவர்களும் இங்கில்லை; எங்களுக்குத் துணையாகவுள்ள ஐராவத யானையும் இங்கில்லை; இப்படி எவருமில்லையாக, என் அரசே! பெண்ணொருத்தி தன்னந்தனியே இக் காட்டிலிருக்கப் பயப்படுகிறேன்; அல்லாமலும் என் கண்கண்ட தெய்வமே! நான் தன்னந்தனியே இருக்கும்போது, கொடியவர்களாகிய அசுரர்களால் என் மானத்திற்கு யாதும் பங்கம் நேருமானால், அதனால் வரும் தீரா வசை என்னளவில்மாத்திரம் நின்றுவிடப் போவதில்லை: அது என்னுடையதாகிய உம்மைச்சூழும்; தேவர்களைச்சூழும்; என்போற பெண் பிறந்தாரெல்லாரையுஞ் சூழும்; அதலால், என் னுயிர்க்கிறைவரே, என் விண்ணப்பத்தைக் கேட்டருளுக; எல்லாவுயிர்களையும் பாதுகாத்தருளுகின்ற அந்த முக்கண் மூர்த்தி எழுந்தருளியிருக்கும் கைலாசத்திற்குத் தேவரீர் போகும்போது தமியேனும் உமதுபிறகே வருவதற்கு அநுமதிதரல்வேண்டும்" என்று இரந்துகின்றாள்.

இவ்வாறு தன்னை இரந்துகிற்கும் தன்தேவியை இந்திரன் தண்ணளியோடு நோக்கி, "வாராய், மடமயிலே, நானும் இந்தத் தேவர்களும் கருணையங்கடலாகிய பரமசிவன் எழுந்தருளியிருக்குங் கைலை மலைக்குப் போனால், நீ தனியே இருக்கவேண்டி நேருமெனவும், அசுரரால் உனக்கு ஏதும் ஆபத்து நேருமெனவும் அஞ்சவேண்டாம்; அரனருளாலும் அரியருளாலும் அவதரித்த ஐயனார் இருக்கிறார்; அவருடைய திருவருள் எங்கும் வியாபித்திருக்கிறது. அந்த ஐயனாரே உன்னையும் என்னையும் உலகிலுள்ள எல்லா உயிர்களையும் தம்முடைய இன்னருளால் பாதுகாப்பார்; அந்த ஐயனாருடைய மகத்துவத்தை நீ அறியாய்போலும்:

'மண்ணகத் தரும் வானவரும் மலர்
அண்ணலுந்தினம்அர்ச்சிக்தும்நீர்மையான்
கண்ண னும்புக ழப்படு காட்சியான்
எண்ணின் அகவ னுக்கெதி ரில்லையே."

பெண்ணே, எங்கள் ஐயனார் இந்த மண்ணுலகத்தாராலும் விண்ணுலகத்தாராலும் பூசிக்கப்படுபவர்; பிரமதேவரும் திருமால்தாமும் அவரைப்போற்றுவர்; அவருக்கு ஒப்பான தெய்வம் வேறில்லை யெனலாம்; அப்படியான அந்த ஐயனாரிடத்தில் நான் உன்னை அடைக்கலமாக வைத்துக் கைலைக்குச் செல்வேன்; ஆருயிர்த் துணைவியே, நீ தனிமையை யிட்டுப் பயப்படாதே" என்று தன் தேவியைத் தேற்றி இந்திரன் ஐயனாரை தியானிப்பானாயினான் (வரும்)

### அறிவித்தல்

யாழ்ப்பாணம் காரைநகர் பஸ்சேவிசுக்கு டிறைவர்மார், கொண்டக்ரர்மார் தேவைப்படுகிறது.
இந்துசாதனம் மூலமாக மனுப்பண்ணவும் மனுப்பத்திரங்களின் முடிவுத் திகதி 25—9—47.
Mis 133 19, 23—9—47.

## பாரதி விழா

காரைநகர் இளைஞர் சங்க ஆதரவில் பாரதியாரின் தினம் (14-9-47) ஞாயிற்றுக்கிழமை கொண்டாடப்பட்டது. பண்டிதர் சோ. தியாகராசன், திரு. வ. திருநீலகண்டன் இளைஞர்கள், மாணவிகள் ஆகியோர் பேசினர். திரு நா. கநகதயா அவர்கள் தலைமை வகித்தார். திரு க. சிவராசா [illegible] விருந்தளிக்கப்பட்டது [illegible]

## விற்பனைக்கு

### பரந்தனில் சிறந்த நெல்வயல்

யாழ்ப்பாணம் டிஸதிறிக் கோட்டின் 302-ம் இலக்கத் தத்துவ வழக்கில் கிடைத்த உத்தரவுப்படி, கீழே விபரிக்கப்பட்டிருக்கும், முழுவதும் நெல்விதைக்கக் கூடிய சிறந்த ஓர் வயலை வாங்குதற்கான கேள்விப்பத்திரங்கள் யாழ்பாணம வண்ணார்பண்ணை நியாயதுரந்தரர் திரு. வீ. வீ. சோமசேகரத்துக்கோ, அல்லது யாழ்ப்பாணம் டிஸதிறிக்கோட் சக்கிடுத்தாருக்கோ, இந்த விளம்பரத் திகதியிலிருந்து 21 நாட்களுக்கிடையில் அனுப்பப்படுதல்வேண்டும்.

ஆதன விபரம்

பரந்தனில் "பரந்தன்காடு" எனப்படும் ஆதனம், விஸதீரணம் 14 ஏக்கர், 1 றூட், 35 பேட்செஸ, எல்லை கிழக்கு சின்னையா துரையப்பாவின் ஆதனம், வடக்கு முடிக்குரிய ஆதனம் மேற்கு வி. கே இளையதம்பியினுதனம், தெற்கு தண்ணீர் வாய்க்காலும் தெருவும்.

மேலே குறித்த ஆதனம் காலஞ்சென்ற கட்டையர் சின்னையாவுக்குச் சொந்தமாயிருந்து யாழ்ப்பாண டிஸதிறிக்கோட்டு 302 இலக்கத் தத்துவ வழக்கில் பராபரிக்கப்பட்ட காலஞ்சென்ற K. சின்னையாவின் கடன்காரருக்குக் கொடுபடவேண்டிய தொகைக்காக விற்கவேண்டுமென்று கோட்டினால் கட்டளை யிடப்பட்டுளது. ஏனைய விபரங்களை யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணை பிறக்ரர் வி. வி. சோமசேகரம் மூலம் அறியலாகும்.

வி. வி. சோமசேகரம்
பராபரிப்புக்காரரின் பிறக்ரர்
Mis 136 23-9-47

## அமவாசையிலேதிலதர்ப்பணம்

பிரம்ம ஸ்ரீ. ச. பொன்னுஸ்வாமிக் குருக்கள் சுதுமலை

அச்சோதை யென்பவள் முற்பிறப்பில் மரீசி புத்திரர்களாகிய பிதிர்கணங்களுக்கு மானசகன்னிகையாகப் பிறந்து அந்தப் பிதிர்களால் நியமிக்கப்பட்ட அச்சோதம் என்னும் சரோதரதீரத்தில் ஆயிரம் தேவவருஷம் தவஞ்செய்து அவர்களைச் சந்தோஷப்படுத்த அலங்கார பூஷிதர்களாய்ப் பிரத்தியட்ச மானார்கள். அவள் அப்பிதிர்களுள்ளே தனக்குப் பிதாமுறையுடைய மாசவன் என்பவனைத் தனக்கு நாயகனாக வருமாறு வேண்டினள்; அதனைக் கேட்ட பிதிர்கள் கோபித்து அவளைப் பார்த்து உன் தவம் வீணாகுமென்று சபித்தனர். அதனால் அவள் யோகப் பிரதிஷ்டையாகிச் சுவர்க்கத்திலிருந்து கீழ்நோக்கி விழுந்து அந்தரத்திலே நின்றாள். அங்கே நின்றபடியே திரும்பவும் பிதிர்களைக் குறித்துத் தவஞ் செய்தாள். அன்று அமாவாசையாதலால் அத்தினத்திலே பிதிர்களைக் குறித்துச் செய்யப்படும் அற்ப தவசுகளிலும் அப்பிதிர்கள் திருப்தியடைவதியல்பாதலால், அவளுடைய தவத்திற்கு மகிழ்ந்து நீ தேவர்கள் செய்யும் கருமபலத்தை யெல்லாம் அனுபவித்து 28-வது துவாபர யுகத்திலே மீன் வயிற்றிலே பிறந்து சத்தியவதியெனப் பெயர்பெற்று, பராசர முனிவரால் வேதவியாசரைப் பெற்று அதன் மேல் சந்தனுமகாராசனுக்கு மனையாளாகி, விசித்திரவீரியன், சித்திராங்கதன் என்பவர்களைப் பெற்றுப் பின் அச்சோதையென்னும் புண்ணிய நதியாகக் கடவையென வரங் கொடுத்துப் போயினார்கள். ஆதலால் அமாவாசைத் திதியில் பிதிர்களைக் குறித்துச் செய்யும் தருப்பணம் விரதம் முதலியவற்றைச் செய்யின் அது அவர்களுக்கு மிக உவப்பாயிருக்கும்.

### அமாவாசையிற் சநநம்

"பெருகமாவாசைதன்னிற் பிறந்திடும்
பிள்ளை தன்னை
இருமைசேருலகிலுள்ளோர்
யாவரும் சிறப்பதல்லான்
மருவுமிம்மதியைத்தேவ மந்திரி
மகிழ்ந்து பார்க்கில்
ஒருவர்க்குந் தோஷமில்லை
ஒளிரும்வேற் கண்ணினாளே.

என்னும் பிரமாணப்படி சந்திரன் சுபராசி, சுபக்கிரகசம்பந்தம், நோக்கு, சுபாம்சம் ஆகியன நல்ல நிலையிலிருந்தால் இத்தோஷம் நிவிர்த்தியாம்.

[illegible] நாழிகையைப் [illegible] பத்தில் பிறந்தால் பிள்ளைக்கும், இரண்டாம் பத்தில் மாதாவுக்கும், மூன்றும் பத்தில் பிதாவுக்கும், நான்காம்பத்தில் மாமனுக்கும், ஐந்தாம்பத்தில் பிள்ளைக்கும் தோஷமுண்டு ஆறும்பத்தில் நன்மையாம் என அறிக. குற்றமான பாகத்தில் பிறந்தால் விதிப்படி சாந்தி செய்க.

## திருச்சி ரேடியோ

புதன் செப்டம்பர் 24

காலை 7.15 தோரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7-30 கும்பகோணம் பி எஸ் லலிதாபாய் பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8-15 தனம்மாள் இசைத்தட்டு 8-30 கமலா நாகநாதன் வயலின் 9 முடிவு.

1 கதம்பம் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 கும்பகோணம் பி எஸ் லலிதாபாய் பாட்டு 2 தமிழில் செய்திகள் 2-05 கும்பகோணம் 215 கல்வி ஒலிபரப்பு 2-45 முடிவு

மாலை 5 கமலா நாகநாதன் வயலின் 5-40 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6-10 அறிவிப்புகள் 6-15 கிராம நிகழ்ச்சிகள் 7 சித்ரகானம் இசைத்தட்டு 7-30 தமிழில் செய்திகள் 7-45 புதிய வெளியீடுகள் இசைத்தட்டு 8 மனப்பின்னல் நாடகம் 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9-15 ஆங்கிலப் பேச்சு 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-40 அறிவிப்புகள் வானிலை 9-45 ஐரோப்பிய சங்கீதம் 10-30 முடிவு.

வியாழன் செப்டம்பர் 25

காலை 7.15 தோரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7-30 கே வி நடராஜன் பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8-15 வாத்ய இசை இசைத்தட்டு 8-30 பாலக்காடு கே எஸ் ருக்மணி பாட்டு 9 முடிவு.

1 கதம்பம் இசைத்தட்டு 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1.40 பெண்ணுலகம் 2 தமிழில் செய்திகள் 2-05 குரலவகை இசைத்தட்டு 2 15 கல்வி ஒலிபரப்பு 2 45 முடிவு

மாலை 5 பாலக்காடு கே எஸ் ருக்மிணி பாட்டு 5-40 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6.10 அறிவிப்புகள் 6-15 கிராம நிகழ்ச்சிகள் 7 சித்ரகானம் இசைத்தட்டு 7-15 நாட்டுவைத்தியம் 7-45 கே எஸ் நாராயணசாமி ஐயர் வீணை 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9-15 குரல்வகை இசைத்தட்டு 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-40 அறிவிப்புகள் வானிலை 9-45 கே வி நடராசன் பாட்டு 10-30 முடிவு.

வெள்ளி செப்டம்பர் 26

காலை 7 15 தோரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7-30 எஸ் கே ரங்கய்யாபாகவதர் பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8-15 திருச்சி வாத்ய கோஷ்டி 8-30 டி பி ராமச்சந்திரன் பாட்டு 9 முடிவு.

1 கதம்பம இசைத்தட்டு 1.30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 எஸ் கே ரங்கய்யா பாகவதர் பாட்டு 2 தமிழில் செய்திகள் 2-05 எஸ் கே ரங்கய்யா பாகவதர் பாட்டு 2-15 கல்வி ஒலிபரப்பு 2-45 முடிவு.

மாலை 5 காரைக்கால் எஸ் சுந்தரகாமாட்சி பாட்டு 5-40 குரான் ஷரீப் விளக்கம் 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6-10 அறிவிப்புகள் 6-15 கிராம நிகழ்ச்சிகள் 7 காஞ்சிபுரம் வி கங்காதரம்பிள்ளை நாகஸ்வரம் 7-30 தமிழில் செய்திகள் 7-45 நமது தபால்பெட்டி 8 காரைக்கால் எஸ் சுந்தர காமாட்சி பாட்டு 8 30 காஞ்சிபுரம் வி கஙகாதரபிள்ளை நாகஸவரம் 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9-15 தென்னிந்திய நாட்டுப்பாடல்கள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-40 அறிவிப்புகள் வானிலை 9-45 எம் எஸ சுப்புலட்சுமி இசைத்தட்டு 10 நீங்கள் கேட்டவை 10-30 முடிவு.

---

உலகத்தில் சமாதானத்தை நிலைநிறுத்தப் பாடுபடுபவருக்கு ஆண்டுதோறும் கொடுக்கப்பட்டுவரும் நோபல் பரிசை இந்த ஆண்டில் மகாத்மாகாந்திக்கு வழங்கவும் ஓர் ஆலோசனை இருந்துவருவதாகத் தெரிகிறது.

* * *

பலஸ்தீனத்தை யூதரின் ஆக்கிரமிப்பில் இருந்து 50000 பேரைக் கொண்ட ஓர் படையை அராபியர் தயார்செய்து வருகிறார்களாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்திய அரசியல்

# லீக்கரின் வீண் பிரசாரம்

## இன்னோர் லீக்கரின் மறுப்பு

### லீக்பிரமுகரின் கண்டனம்

இந்தியாவில் உள்ள ஹிந்துக்கள், பாகிஸதானை எந்தநேரமாவது தாக்கலாம். ஆகவே அதற்குத் தயாராகப் பாகிஸதான் இருக்கவேண்டும். பாகிஸ்தானிலுள்ள சகல முஸ்லிம வாலிபர்க்கும் கட்டாய ராணுவப்பயிற்சி அளிக்கவேண்டும் என்று மேற்குப் பாஞ்சால முஸ்லிம்லீக் நிருவாக சபைக் கூட்டத்தில் மாலிக் பிரோஸ கான்நூன் ஓர் நிர்ணயத்தை எடுத்தாண்டார். இந்த நிர்ணயத்தைக் கண்டித்து ஐக்கியமாகாண முஸ்லிம் லீக் தலைவர் சௌத்லிகாலிக்ஸ்மான் ஓர் அறிக்கை விடுத்திருக்கிறார். பாகிஸ்தானில் உள்ள முஸ்லிம்லீக் தலைவர்கள் இப்படியான பிராந்திகளை மக்கள் மனத்திற் கிளப்புவதை விடுத்து, இந்தியாவில் மகாத்மாகாந்தி செய்வதுபோல, தேசப்புனருத்தாரண கைங்கரியத்திலும், வகுப்புச் சமரசம் வளர்ப்பதிலும் ஈடுபடவேண்டுமெனவும் அவ்வறிக்கையில் மிஸ்டர் காலிக்ஸ்மான் குறிப்பிடுகிறார். இந்தியா, பாகிஸ்தானைத் தாக்குமென எப்படி முஸ்லிம்கள் சிலர் பிரசாரம் செய்கிறார்களோ, அதேபோல இந்தியாவில் உள்ள ஹிந்துக்கள் சிலரும், பாகிஸ்தானே இந்தியாமீது படையெடுக்கும் என்று பூச்சாண்டி காட்டுகிறார்கள். இந்தப் பிராந்திகளுக்கெல்லாம் ஆதாரமேயில்லை என்று மிஸ்டர் காலிக்ஸ்மான் கூறி, ஹிந்துக்களும், முஸ்லிம்களும், சீக்கியரும் பாகிஸ்தானிலும், இந்தியாவிலும் பாலும் தேனும்போல ஒற்றுமையுடன் ஒழுகிவரவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறார்.

○

### சமஸ்தானப் போராட்டங்கள்

மைசூர், ஹைதராபாத் சமஸ்தானங்களில் நிகழும் சாத்விகப் போராட்டம் இன்னும் நின்றபாடில்லை. மைசூரில் சமஸ்தானக் காங்கிரஸ் தலைவர்கள் அனைவரும் சிறையில் அடைக்கப்பட்டு விட்டனர். ஹைதராபாத்தில் நிலைமை வரவர மோசமாகிக்கொண்டே வருகிறது. சிறுபான்மையினரான முஸ்லிம்கள் சமஸ்தானத்தின் ஆதரவுடன், பெரும்பான்மையினரான ஹிந்துக்களைத் துன்புறுத்தவும் தலைப்பட்டுவிட்டனர் சென்றவாரம் பலவிடங்களில் பொலிசார் துப்பாக்கிப்பிரயோகம் செய்தனர். ஹைதராபாத் சமஸ்தானம் இந்தியாவுடன் சேர்ந்து பொறுப்பாட்சியைத் தன் மக்களுக்கு நல்கும்வரை அங்கே அமைதி நிலவமாட்டாது.

○

### சண்டை வேண்டாம்

சென்றவாரம் மகாத்மாகாந்தி டெல்லியில் நிகழ்ந்த ஓர் முஸலீம்கள் கூட்டத்தில் இப்போது இந்தியா வெங்கணும் நிகழ்ந்துவரும் வகுப்புக் கலவரத்தைப் பற்றிக் குறிப்பிட்டு வருத்தம் தெரிவித்தார். ஹிந்துக்களும் முஸலீம்களும் இப்படியே சதா பிணக்குக்கொண்டு ஒருவர் கழுத்தை ஒருவர் முறிக்க முன்வந்தால், நாம் இவ்வளவு தியாகம் செய்து பெற்ற சுதந்திரத்தின் கதி என்னகும் என்று காந்திஜி கேட்டார். மகாத்மா முஸலீம்கள் அகதிகள் தங்கியிருந்த சில இடங்களைப் பார்வையிட்டு மிகவும் கவலைப்பட்டு அவர்களுக்கு ஆறுதல் கூறினர். முந்தி வங்கப் பிரதமராகவிருந்த பின் கல்கத்தா வகுப்புக் கலவரத்தை ஒழிப்பதில் மகாத்மாவுடன் தொண்டாற்றிய ஜனாப் ஷூராவர்த்தி சென்றவாரம் டெல்கிக்குப்போய் மகாத்மாவைக் கண்டார். அதன் பின் அவர் கராச்சிக்குச் சென்று மிஸ்டர் ஜின்னாவுடன் சம்பாஷித்தாராம்.

# சைவபரிபாலனசபை ஆச்சிரமநிதி

## பணம் உதவியோர் விபரம்

| | | | |
|---|---|---|---|
| ஸ்ரீமான்கள் | | முன் கணக்குப்படி | 2539 00 |
| ,, | P. சின்னத்துரை | | 5 00 |
| ,, | V வல்லிபுரம் | | 5 00 |
| ,, | M. மகாதேவன் | | 10 00 |
| ,, | S திபாகரசா | | 5 00 |
| ,, | A. அருளம்பலம் | | 50 00 |
| ,, | A. முத்துத்தம்பி (முதலாம்தவணை) | | 25 00 |
| ,, | சி. ஐயம்பிள்ளை | | 20 00 |
| ,, | V. T. சம்பந்தன் | | 25 00 |
| ,, | S P. கந்தையா | | 25 00 |
| அகில இலங்கை மலேயன் கஷ்ட நிவாரணச் சங்கம் | | | 200 00 |
| | | | 2909 00 |

தி. இராசநாயகம்,
தனதிகாரி, 18—9—47.

Mis 138 23.9-47

## த. காங்கிரஸ் தலைமைப் பதவி

இன்னும் சில தினங்களில் தமிழ்க்காங்கிரசின் பெரிய கூட்டம் ஒன்று யாழ்ப்பாணத்திற் கூடும் என்றும், அதன் எதிர்கால திட்டம், அக்கூட்டத்திலேயே உருவாக்கப்படலாம் என்றும் தெரிகிறது.

காங்கிரஸ அமைப்பிலும் சில மாற்றங்கள் செய்யப்படும் என்றும், அந்தமாற்றங்களின் பயனாக, காங்கிரஸ கொள்கைகள் சிங்கள மக்களும் விரும்பத்தக்க முறையில் திருத்தியமைக்கப்படும் என்றும் சொல்லப்படுகிறது.

இன்னும் இப்போது காங்கிரஸ தலைவராகவுள்ள ஸ்ரீ ஜீ ஜீ. பொன்னம்பலம் அரசியல் சம்பந்தமான பல சிக்கலான பிரச்சினைகளை ஆராய்ந்து பல முடிவுகள் செய்யவேண்டியிருக்கிறது. எனவே, அவர் தமது நேரம் முழுவதையும், இதுகாறும் செய்ததுபோலக் காங்கிரஸ் விவகாரத்திற் செலவிட முடியாதாகையால், அப்பதவியிலிருந்து அவர் விலக, ஸ்ரீ எஸ். ஜே. வி. செல்வநாயகம் அதற்குத் தெரிவுசெய்யப்படவுங்கூடும் என்றும் "டைம்ஸ்" பத்திரிகையின் நிருபர் தெரிவிக்கிறார்.

## கோதுமை மா விநியோகம்

கட்டுப்பாட்டு விலைக்கு கூப்பனில்லாது நேரே ஜனங்களுக்குச்சில்லறையாக விற்பதற்கு அதிகப்படியான கோதுமை மா மொத்த வியாபாரிகளுக்கு விநியோகம் செய்யப்படும். உணவு கட்டுப்பாட்டு விகிதத்திற்கு மேலதிகமாக மா தேவையுள்ளவர்களை இச்சந்தர்ப்பத்தை உபயோகித்துக்கொள்ளுமாறு இத்தால் அறிவிக்கிறேன்.

இ சிந்தாமணி
யாழ்ப்பாணம் உணவுக்கட்டுப்பாட்டு,
உப அதிகாரிக்காக.

G 97 23—9—47.

# கந்தபுராணக் கவி நுட்பம்

## திருவிளையாட்டுப் படலம்

வித்துவசிரோமணி ந. ச. பொன்னம்பலப்பிள்ளை யவர்கள் வாய்க்கேட் டெழுதப்பெற்ற பிரதியிலிருந்து எடுத்த அரும் பெருங் குறிப்புக்கள் இப் [ ] பகரக் குறியீட்டுடன் வெளியிடப்பட்டுள்ளன.

அக்காலை யில்வேள் செலுத்துங்கணை யண்டர் தம்மின்
மிக்கா னயிரா வதநெற்றி யுண்மேவி வல்லே
புக்காவி கொண்டு புறம்போதப் புலம்பி வீழா
மைக்கார் முகிலச் சுறவேயது மாண்ட தன்றே.

அப்போது முருகக் கடவுள் எய்த அம்பானது தேவர்கோனாகிய இந்திரனது வாகனமாயுள்ள ஐராவதமென்னும் யானையின் நெற்றியுட் புகுந்து அதன் உயிரைக் கவர்ந்துகொண்டு ஊடறுத்துப் போக, அந்த யானையானது கரிய முகிலும் அஞ்சும்படி கதறிக்கொண்டு நிலத்தில் வீழ்ந்து மாண்டது என்பது கருத்து. (50)

தன்னேர் களிறு மடிவெய் தலுந்தான வேந்தன்
உன்னு வெனவே யிரங்கா வயல்போகி நின்று
மின்னே டுறழ்தன் சிலைதன்னை வெகுண்டு வாங்க
முன்னோன் மதலையொரு கோலவன மொய்ம்பி லெய்தான்.

விண்ணுலகுக் கரசனாகிய இந்திரன் தனது ஒப்பற்ற யானை இங்ஙனம் மாண்டொழிதலும், ஐயோ! என்று கலங்கி முருகவேளுக்கெதிரே போய் நின்று, வீரலக்குமியோடு விளங்குந் தன் வில்லைச் சினத்துடன் வளைப்பதற்கிடையில், முழுமுதற் கடவுளாகிய பரமசிவனது திருக்குமாரராகவுள்ள குமரமூர்த்தி அந்த இந்திரனுடைய மார்புக்கிலக்காக ஒரேயொரு பாணத்தைச் செலுத்தினாரென்பது கருத்து.

தானவேந்தன் என்பதை வேள்விக்கு வேந்தன் எனப் பொருள் கொள்ளினும் பொருந்தும். தன் களிறு மடிந்ததைக் கண்டு 'ஐயகோ' என்று இரங்கிய இந்திரன் உடனே இகலுற்று முருகவேள்முன் சென்று சீற்றத்தோடு தன் வில்லை வளைத்தானென்றபடி; இவன் கொண்ட வெகுட்சியும் யுத்தவூக்கமும் முருகப் பெருமானிடத்துச் செல்லாவென்பதை அவனுக்குத் தெருட்டும்பொருட்டே, அவன் வில்லைக் குனித்து அம்பு தொடுத்தற்கு முந்தி முருகவேள் ஒருகணை யுய்த்தனரென்க; இந்திரன் வெகுண்டவிடத்து முருகவேள் தாமுஞ் சிறிது சீற்றங் காட்டின் அச் சீற்றத் தீயினால் இவ்விந்திரன் வெந்து சாமபராய்ப் போவானே, அங்ஙனஞ் செய்தலையொழிந்து இவனைப் பொருட்படுத்திப் பெருமான் ஒரு அம்பெய்தனென்னையெனின், முன்னோன் மதலை இவனுக்கு மறக்கருணை செய்யவேண்டிப் பின்னரும் திருவிளையாடல் செய்யத் திருவுளங் கொண்டனர்போலும்; சீற்றத்திற்கிருப்பிடம்நெஞ்சேன்பராதலின், "மொய்ம்பிலெய்தான்" என்க. இங்கே "ஒருகோல" என்றது ஒருமையென்னும் எண்ணைக் குறித்ததன்றி ஒப்பற்ற என்னும் பொருளில் வந்ததன்று; இது "கோலொன்று" என அடுத்த திருவிருத்தத் தொடக்கத்தில் வருதலானும் பெறப்படும். (51)

கோலொன்று விண்ணோர்க் கிறைமேற் குமரேசன் உய்ப்ப
மாலொன்று நெஞ்சன் வருந்திப்பெரு வன்மை சிந்தக்
கலொன்று சாபத் தொழினீத்த னனகையி லுற்ற
வேலோன் றதனைக் கடிதே குகன்மீது விட்டான்.

குமாரக் கடவுளானவர் தேவர்கோனாகிய இந்திரன்மீது ஒரு அம்பை எய்தலும், மயக்கத்தோடுகூடிய உள்ளத்தினனாகிய அவ்விந்திரன் வேதனைப்பட்டுத் தனது மிக்க வலிமையுங் கெட்டு குதையோடு கூடிய வில்யுத்தஞ் செய்தலைக் கைவிட்டு, தன் கைகளுளொன்றிற் பற்றியிருந்த வேற்படையொன்றை முருகக் கடவுள்மீது விரைந்து செலுத்தினன் என்பது கருத்து.

மாலொன்று நெஞ்சன் என்பதற்கு அகங்கார மமகாரங்களோடுகூடிய உள்ளத்தவன் எனினுமாம். இதனை "ஆங்காரமிக்க மகவான்" எனக் கீழ்வரும் 55-ம் திருவிருத்தமும் வலியுறுத்துமென்க; முருகமூர்த்தியோடு "வெகுண்டு" போர் செய்தற்கு முயன்றனாதலின் அவ்வெருட்சிக்குத் தண்டனையாக அவ்விந்திரன் வருந்தும்வண்ணம் ஒரு அம்பை எய்ய, அதனால் அவன் வருந்தினனாதலின் "வருந்தி" எனப்பட்டது; அந்த அம்பு பட்டமையினால் வருந்தி அவனுடைய வலிபுங்கெட, போதிய வலிமையின்றி வில்யுத்தஞ் செய்தல் இயலாதாக, விற்போரைக் கைவிட்டானென்க. இந்திரன் தன் கரங்களிற் பொருந்திய குலிசம் முதலிய ஏனைய படைகளை முந்தியே செலுத்தி யொழிந்தானாதலாலும், அம்பெடுத்து வில்லிலே தொடுத்துத் தூண்டுதற்கு ஆற்றலில்லாமையினாலும் தன் கையில் எஞ்சியிருந்த வேற்படையைச் செலுத்தினனென்பார், "கையிலுற்ற வேலொன்றதனை... விட்டான்" எனவும், தான் விரைவில் அவசமடைதலுங் கூடுமாதலின், அவசமடைதற்கு முந்திக் காலதாமதமின்றி விரைந்து செலுத்தினனென்பார், "கடிதே......விட்டான்" எனவுங் கூறினாரென்க; கையில் வேலுமில்லையாயின் இவன் சமர்புரியாது வாளா நிற்றலும், இல்லையேற் பின்னிடுதலுங் கூடுமென்னும் பொருளும் இங்கே தொனித்தல் காண்க; குகம் என்பது ககாரகாசமாகிய உள்ளக் கமலமெனவும், அன்பருடைய உள்ளக் கமலத்தில் வியாபித்திருத்தலினால் குகன் என்னுந் திருநாமம் முருகவேளுக்காயதெனவும் முதனூல் கூறும். (52)

## வியாபாரத்திற்கழகு விளம்பரஞ் செய்தல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலேயாவுக்கு நாகபட்டணம் மார்க்கமாக

## கப்பல் சீட்டு

[ மாசமிருமுறை கப்பல்கள் போகின்றன ]

யாழ்ப்பாணமிருந்து றெயில்வே ரிக்கற், சாப்பாடு, லக்கேஷ்சார்ஷ் இருப்பிடச்செலவு எல்லாம் உட்பட நாகபட்டனமிருந்து பினுங் செல்ல டெக் ரிக்கற் ரூபாய் 130 க்கு எங்கள் மூலமாக பெற்றுக் கொள்ளலாம்

வேறு செலவு உங்களுக்கு இல்லை

பல நூற்றுக்கணக்கானோர் எங்கள் மூலமாகப் பிரயாணஞ்செய்து திருப்தியடைந்து கொடுத்த நற்சாட்சிகள் அநேகம் உண்டு.

வட இலங்கையில் இவ்வகையில் முதல்ஸ்தானம் வகிக்கிறோம்

எங்களிடம் மற்ற விபரங்களை நேரிலோ லெட்டர் மூலமோ தெரிந்துகொள்ளலாம்.

ஸ்ரீ கதிர்வேல் அன்கோ,
252, காங்கேசன்துறைறோட்,
சிவன்கோவிலடி,
யாழ்ப்பாணம்.

தந்தி (Srivel)
பிராஞ்சு: நாகபட்டணம்.

Std 33 2—9—47&28 2.48



## யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி

1918-ம் ஆ ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா

**134,3670**

100 ரூபா விகிதமான 8000 பங்குகள்

பங்குப்பணங் கட்டுமுறை.

மாசமொன்று 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப் பற்றுவரவு

எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானல் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியாநோட்டு வட்டத்திறரு மாற்றிக்கொடுக்கப்படும்.

க ட ன்.

நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 9 விகிதம் அறவிடப்படும். (ஈடுவைத்தவர்கள்) முதலையும் பாகம்பாகமாகக்கொடுக்கலாம். இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்

S. கனகசபை
சிறுப்பர்.

Std. 14 20-11-46—20-11-47 (தி)



## பசந்த லேகியம்

இதனல் மூலச்சூடு, இருமல் பித்தப் பாண்டு, குன்மவாய்வு, நெஞ்செரிவு, கை கால் வலி, அசதி, அஜீரணம், வயிற்றுப் பொருமல், புளித்த எப்பம், மலச் சிக்கல், பீனிசம், பார்வைக் குறைவு, வெள்ளை, சூலை, சந்து வாய்வு, பிரமேகம் முதலிய வியாதிகள் சூரியனைக் கண்ட பனிபோல் நீங்கும். இந்திரியம் கட்டுப்பட்டு, தேக புஷ்டி, வஜீகரம், பலம் முதலானவை உண்டாகும்.

ஸ்திரீகளுக்குண்டாகும் பிரதானமான வியாதியாகிய சூதகக்கட்டு, பிரசவத்தால் உண்டாகும் பல கொடிய உபத்திரவங்கள் தீர்ந்து மாதவிடாய் குறைந்து அல்லது அதிகமாய்க்காணுதலால்நேரிடும் பல நோய்களும் தீர்ந்து, தேகத்துக்குப்பலம் உண்டாக்கும்

ஒருறுத்தல் விலை ரூபா 25
அரைறுத்தலுக்கு ரூபா 12-50
கால்றுத்தல் ரூபா 6-25

விலாசம்:

க. ஆறுமுகம்பிள்ளை
இ. 156, செக்கடித்தெரு கொழும்பு

Std. 1. 26—3—47 to, 1—4—48



## கந்தசாமி வைத்தியர்

### அமிர்த சர்க்கரை லேகியம்

தாதுவிருத்தி யுண்டாகி நரசிங்கம் போன்ற தேக பலத்தைத் தருவதில் இணையற்ற லேகியம். நெடுநாட்பட்ட வாதங்கள் எவற்றையும் தீர்க்கும். பித்தக் கிறுதி பாண்டு குன்மம் நித்திரையின்மை மூளைக் குழப்பம் இருமல் அரிகுரல் குடற்புண் மலக்கட்டு மூலவாய்வு அசீரணம் இவைகளை மாற்றி நல்ல பசி உண்டாக்கும். மேகம் மேகத்தடிப்பு நீராழிவு நீர்க்கடுப்பு நீங்கும். கெற்பனிகட்கு உண்டாகும் வாந்தி அரோசியம் இருமல் மலசலக்கட்டு நீங்கும். கருவை அழியாமல் காக்கும். பாலர்கட்கு கணை பாண்டு இராக்காய்ச்சல் இருமல் தீர்க்கும் இணையற்ற சஞ்சீவி.

பெரியவர்கள் காலை மாலை 1 கழஞ்சு வீதம். சிறியவர்கள் கால் கழஞ்சு அரைக்கழஞ்சு வீதமும் சாப்பிடலாம்

**கால் றுத்தல் விலை ரூபா 5-00**

வீ. பீ. பி யில் அனுப்புவோம்.

விலாசம்:

ஆயுள்வேத சிவசோதி மெடிக்கல்ஹோல்
— வல்வெட்டித்துறை

Std 25 1-7-47—30-6-48 (ச)



## இலங்கை வங்கி

(1938-ம் ஆண்டு 53-ம் இலக்கக் கட்டளைச் சட்டத்தின்படி சட்டபூர்வமாக இணைக்கப்பட்டது)

### இலங்கை அரசாங்கத்தின் வங்கிக்காரர்

| | | |
|---|---|---|
| வாக்களிக்கப்பட்ட மூலதனம் | ரூபா | 4, 500, 000, 00 |
| கொடுக்கப்பட்ட வேதனம் | ,, | 3, 000, 000, 00 |
| சேமநிதி | ,, | 2, 600, 000, 00 |

தலைமைக்காரியாலயம்:- பிறிஸ்ரல்வீதி, கொழும்பு.
நியுயோர்க் ஏஜெண்டுகள்:- ஏர்விங் ட்ரஸற் கம்பனி.
லண்டன் ஏஜெண்டுகள்:- பார்க்கினேஸ வங்கி.
கிளைக்காரியாலயங்கள்:- புறக்கோட்டை, (கொழும்பு) கண்டி, காலி. திருக்கோணமலை, பாணந்துறை, குருநாகலை (புரைய நகரமண்டபம்)
யாழ்ப்பாணத்துக் காரியாலயம்:- 242, ஆஸ்பத்திரிரோட், யாழ்ப்பாணம்,

வாடிக்கைகாரர்களுக்குப் பல விசேஷ வசதிகள் இவ்வங்கி செய்துகொடுக்கின்றது.

நடைமுறைக்கணக்கு:-
இலங்கையில் (திருக்கோணமலையை ஒழிந்த) உள்ள எல்லாப் பிரதான நகரங்களிலும் மாற்றக்கூடிய "செக்"குகள் கொமிஷன் இன்றிப் பெற்றுக்கொள்ளப்படும்.

சேமிப்புப் பணம்:-
ஆகக்கூடிய தொகை ரூபா 10,000. வட்டி நூற்றுக்கு வருடம் ஒன்றுக்கு 2 விகிதம் கேட்டநேரம் திருப்பிக் கொடுக்கப்படும்.

நிரந்தர சேமிப்பு:-
இதற்கான விகிதம் முதலியவற்றைக் கேட்டு அறிந்துகொள்ளலாம்.

கடன்களும் மேலதிகமாகக் கடன் பெறுதலும்:-
அங்கீகரிக்கப்பட்ட பிணையின் பேரிற் கொடுக்கப்படும்.

நாணயமாற்று:-
இதற்கான ஏஜெண்டுகள் உலகெங்கும் உண்டு.

பிறநாட்டு விவகாரப் பகுதி:-
ஜீ. ஓ. எச். சட்டிடம், யோர்க் வீதி, கொழும்பு.

இந்தியா, மலாய்நாடுகளுக்கு அனுப்பக்கூடிய உண்டியல், தந்தி, மாற்றுப் பத்திரங்கள் விஷயமாக விசேஷ வசதிகள் செய்து கொடுக்கப்படும்

T. S. முத்துலிங்கசாமி
ஏஜெண்டு,

( Std.29 1-8—30-7-48)



## கொழும்பு—சிங்கப்பூர் கப்பல் பிரயாணம்

மாதம் ஒருமுறை ஒழுங்காகச் செல்லும் கப்பலில் பிரயாணச்சீட்டு எம்மூலம் பெற்றுக்கொள்ளலாம். பிரத்தியேக வண்டியில் யாழ்ப்பாணமிருந்து பிரயாணம், கொழும்பில் தங்கும் வசதி யாவும் குறைந்த செலவில் ஏற்பாடு செய்யப்படும்.

நாகபட்டணம் பினுங் பிரயாணிகளின் கட்டணம் 130 ரூபாவாகக் குறைக்கப்பட்டிருக்கிறது.

விபரம்:
எஸ். ஆர். எஸ். நாதன்,
21/3, ஸ்ரான்லி ரோட் யாழ்ப்பாணம்
[வின்சர்-வெலிங்டன் படமாளிகைகளின் மத்தியில்]

Std 23. 6-6-47—6 6-48



## விளம்பரம்

இப்பொழுது எங்கள் கைவசமுள்ள பற்கள் பிரபையுடையன; அழகிய இயற்கையானநிறமுடைய முரசு பொன்ற முரசோடு கூடியன; சராசரி ½ அவுன்ஸ் நிறையுள்ள பற்கள் இறகுபோலப் பாரமற்றன; ஆனல் ஒருபோதும் உடையாதன; முரசில் இலகுவாக மாட்டத்தக்கன: எங்களிடத்தில் ஒருமுறை வாங்கி உடயோகித்தாற்றான் இந்த உண்மைகள் உங்களுக்குப் புலப்படும்.

பத்திராஜு மாளிகை
[யாழ்ப்பாணம் அப்போதிக்கரிஸ கம்பனிக்கு எதிரேயுள்ளது]
யாழ்ப்பாணம்

Std 28 11-7—10-10-47.


வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலக மெல்லாம்.

Printed and Published by PANDIT V. T. SAMBANDHAN, residing at Vannarponnai West, Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabha, Jaffna, at their Press, the Saiva Prakasa Press, Vannarponnai Jaffna. on Tuesday, September 23, 1947.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org